2022 ஏப்ரல் 25]

அதேபோல, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய உத்தரவிற்கிணங்க, புறவழிச்சாலை வெகுவிரைவிலே அமைத்துத் தரப்படும் என்ற உத்தரவாதத்தைத் தந்திருக்கிறார். ஏற்கெனவே ரூ.15 கோடி செலவில் திருநெல்வேலியில் ஆதிச்சநல்லூர் ஆராய்ச்சி நிலையம் அமைத்துத் தரப்படுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இப்படி தொடர்ந்து, திருநெல்வேலி தொகுதிக்கு கட்சி பாராமல், நாளும் திட்டங்களைத் தந்து கொண்டிருக்கின்ற, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியையும், வாழ்த்துகளையும் நான் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 164, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. ராமலிங்கம், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

164—

சாலையை அகலப்படுத்துதல்

***12635—திரு. பெ. ராமலிங்கம்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாமக்கல் முதல் பரமத்தி-வேலூர் செல்லும் சாலை, குப்பம்பாளையம் முதல் வள்ளிபுரம் வரை அகலப்படுத்தி, மேம்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எ.வ. வேலு, பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

நாமக்கல் நகரிலிருந்து குப்பம்பாளையம் வழியாக பரமத்தி–வேலூர் வரை 20 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. இதில் நாமக்கல்லிலிருந்து குப்பம்பாளையம் வழியாக வள்ளிபுரம் வரை 5 கிலோ மீட்டர் தூரம் உள்ளது. இந்த 5 கிலோ மீட்டர் தூரமும் கைவிடப்பட்ட தேசிய நெடுஞ்சாலையாகும். இது இருவழித் தடமாக இருந்தது. இதனை நான்கு வழித்தடமாக 2021–2022 ஆம் நிதியாண்டில் CRIDP மூலமாக 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அகலப்படுத்தி, மேம்பாடு செய்ய ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டு, இப்பொழுது பணி துவங்கும் நிலையில் உள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. ராமலிங்கம் அவர்கள்.

திரு. பெ. ராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் நகர மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை நிறைவேற்றும்வகையில் நாமக்கல் முதல் பரமத்தி–வேலூர் வரை செல்லும் சாலையை அகலப்படுத்தி, மேம்பாடு செய்ய ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்டு பணிகள் துவங்கப்படும் என்று அறிவித்திருக்கின்ற மக்களின் முதல்வர் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்திலே நெஞ்சார்ந்த நன்றியினை நாமக்கல் தொகுதி மக்களின் சார்பாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–05

நாமக்கல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட நாமக்கல் முதல் சேந்தமங்கலம் செல்லும் நெடுஞ்சாலையிலே வேட்டாம்பாடி என்ற இடத்தில் ஏரிக்கரையின் அருகிலே சாலை மிகவும் குறுகியதாக இருக்கின்ற காரணத்தால் அடிக்கடி விபத்துகள் ஏற்படுகின்றன. எனவே அந்த இடத்தில் ஒரு தடுப்புச் சுவர் அமைத்து சாலையை அகலப்படுத்தி மேம்பாடு செய்தால், அந்தப் பகுதியிலே போக்குவரத்தும் சீராக இருக்கும். விபத்துகளையும் தவிர்க்க முடியும். எனவே, இந்த ஆண்டே அந்தச் சாலையை அகலப்படுத்தித் தரவேண்டும் என்றும், அதேபோல் நாமக்கல்–திருச்சி சாலையில், நாமக்கல் பேருந்து நிலையத்திலிருந்து நளா ஓட்டல் வரை அந்தச் சாலையை அகலப்படுத்தித் தர வேண்டும். ஏனென்று சொன்னால், அந்தப் பகுதியிலே மகளிர் கல்லூரி இருக்கிறது; கால்நடை மருத்துவமனை மற்றும் அரசு பொது மருத்துவமனை இருக்கிறது. எனவே, அந்தச் சாலையையும் அகலப்படுத்தித் தந்தால் போக்குவரத்து சீராக அமையும் என்பதைத் தெரிவித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதனைச் செய்து கொடுக்க ஆவன செய்வார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சாலை ODR–ல் இருக்கிறதா அல்லது MDR–ல்

2022 ஏப்ரல் 25]

இருக்கிறதா அல்லது SH–ல் இருக்கிறதா என்று அதனுடைய வகைப்பாடையெல்லாம் தெரிந்துகொண்டு, அதற்குப் பின்னால் சம்பந்தப்பட்ட கோட்டப் பொறியாளரை அழைத்துப்பேசி, அது எந்த நிலையில் இருக்கிறது என்பதை அலசி, ஆராய்ந்து, அதற்கு முன்னுரிமை அளித்து, அந்தச் சாலையை இந்த ஆண்டே எடுத்துக்கொள்வதற்கு அரசு முயற்சிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. ராமலிங்கம் அவர்கள்.*

திரு. பெ. ராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நாமக்கல் நகருக்கு புறவழிச்சாலை அமைக்கின்ற திட்டம், 2013 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, கிட்டத்தட்ட 10 ஆண்டுகளாக அந்தத் திட்டம் கிடப்பிலே இருக்கின்றது. சாலை அமைப்பதற்கு நிலம் கையகப்படுத்துவதற்கான வேலை மிகவும் மந்தமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. நாமக்கல் புறவழிச்சாலையானது, 22.387 கிலோ மீட்டர் நீளத்திற்கு அமைக்கப்படுகின்றது. அந்தச் சாலை 7 நெடுஞ்சாலைகளை இணைக்கின்ற சாலையாக இருக்கின்றது. அது நாமக்கல்–சேலம்–முதலைப்பட்டி தேசிய நெடுஞ்சாலையில் ஆரம்பித்து, நாமக்கல்–கரூர் செல்கின்ற வள்ளிபுரம் தேசிய நெடுஞ்சாலையை இணைக்கின்ற சாலை. அந்தச் சாலை நாமக்கல்–துறையூர், நாமக்கல்–சேந்தமங்கலம், நாமக்கல்–மோகனூர், நாமக்கல்–திருச்சி, நாமக்கல்–பாலப்பட்டி, நாமக்கல்–பரமத்தி–வேலூர் என அனைத்து தேசிய நெடுஞ்சாலைகளையும் இணைக்கின்ற சாலை. எனவே, அந்தத் திட்டத்தினை விரைவுப்படுத்தி, வேகப்படுத்தி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதனை உடனடியாக நிறைவேற்றித் தருவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைப் பணிவோடு கேட்டு அமர்கின்றேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் புறவழிச்சாலை என்பது, 22 கிலோ மீட்டர் நீளத்திற்கு அமைக்க நில எடுப்பிற்காக, 11 கோடி ரூபாய் மதிப்பிற்கு நிருவாக ஒப்புதல் அளித்து, 87 கோடி ரூபாய் மதிப்பிற்கு*

திருத்திய நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இதற்காக முதலைப்பட்டி, மரூர்பட்டி, விட்டமநாயக்கன்பட்டி, வீசாணம், வேட்டாம்பாடி, ரெட்டிபட்டி, பொம்மசமுத்திரம், அக்ரஹாரம், வசந்தபுரம், வகுரம்பட்டி, லத்துவாடி மற்றும் தொட்டிபட்டி ஆகிய 11 கிராமங்களில் மொத்தம் 142 ஏக்கர் நிலம் கையகப்படுத்த வேண்டிய பணியிருக்கிறது. இதில் ஏறத்தாழ 33 ஏக்கர் நில மாற்றம் செய்யும் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. இந்த நில எடுப்பு முழுமையாக முடிந்தவுடனேயே, அதற்குத் திட்ட மதிப்பீடுகளெல்லாம் தயார் செய்து, விரைந்து அந்தச் சாலை அமைக்கின்ற பணியில் அரசு ஈடுபடும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள்.

திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மாவட்டத்திலே, மேற்கு புறவழிச் சாலைக்காக 400 கோடி ரூபாய் மாண்புமிகு முன்னாள் முதல்வர், எதிர்க்கட்சித் தலைவர் அவர்களால் நிதி ஒதுக்கப்பட்டு, நில எடுப்புப் பணி நடந்துகொண்டிருக்கிறது. இந்தச் சாலை, பாலக்காடு மெயின்ரோடு, மதுக்கரை, சுகுணாபுரத்தில் ஆரம்பித்து, பெரியநாயக்கன்பாளையத்திற்கு அருகில் இருக்கக்கூடிய நரசிம்மநாயக்கன்பாளையம் வழியாகப் போகிறது. நில எடுப்பு நடந்துகொண்டிருக்கிறது. இப்போது வேகம் குறைந்து நில எடுப்புப் பணி நடக்கிறதாக கேள்விப்படுகிறோம். அதேபோல, இதை 3 phase ஆகப் பிரித்து இருந்தோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு முன்பு பேசும்போதுகூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதாகச் சொல்லி, அங்கே முழுமையாக நில எடுப்புப் பணிகள் முடிந்த பிறகுதான் சாலை அமைக்கப்படும் என்று கூறினார். இது பல சாலைகளை இணைக்கும் சாலை, மருதமலை ரோடு உட்பட பல சாலைகள். ஆகவே, இது 3 phase ஆக உள்ளது. நில எடுப்பு எடுத்த வரையில் சாலை ஒவ்வொரு phase ஆகப் போட்டால் கொஞ்சம் நன்றாக இருக்கும். இப்போது நீதிமன்றம் சொன்னதற்கேற்ப நில எடுப்பு எப்படியும் நாம் எடுத்துவிடுகிறோம். ஆகவே, 3 phase ஆகப் போடவேண்டும் என்று கேட்டு, இது கேரள மாநிலத்தில் இருந்து வருபவர்கள், கோவை மாவட்டத்தை சேர்ந்தவர்கள், நீலகிரி மாவட்டத்திற்கு செல்வதற்கு ஏதுவாக, சுலபமாக இருக்கக்கூடிய சாலையாகும். எனவே, வேகமாக முடித்துத்தர வேண்டுமென்று மாண்புமிகு

2022 ஏப்ரல் 25]

பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களை கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய சட்டமன்ற எதிர்க்கட்சியினுடைய கொறடா, மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி அவர்கள், ஒரு நல்ல கருத்தைத்தான் சொல்லியிருக்கிறார். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே, பொறுப்பேற்றவுடனேயே, சாலைகளையெல்லாம் அமைக்க வேண்டுமென்று சொன்னால், நில எடுப்பு வேலை முழுமையாக முடிந்த பின்பு அவற்றை எடுத்தால்தான் அந்தச் சாலைகள் முடியும் வரை, சிறப்பாக அமைக்க முடியும் என்று சொன்னார். சில நேரங்களில் 50 சதவிகிதம் நிலம் எடுத்துவிட்டு, நாம் சாலையை அமைக்கின்றபோது, மீதி நில எடுப்பிற்குக் காலதாமதமாகிறபோது, அரசாங்கத்தின் பணம் வீணாக்கப்படுகிறது. அதேநேரத்தில் அந்த வேலை பாதியில் நின்றுவிடுகிறது; பயன்பாட்டிற்கு வருவதில்லை. ஆனால், கோயம்புத்தூர் மாவட்டத்தைப் பொறுத்தவரை அது அப்படியல்ல. கோயம்புத்தூரை பொறுத்தவரைக்கும், ஒவ்வொரு சாலையை இணைக்கின்ற அளவிற்குத்தான் இடையிலே, இடையிலே அந்த மேற்கு புறவழிச்சாலை என்பது இருக்கிறது.*

முற்பகல் 10–10

அந்த அடிப்படையிலே முதல், இரண்டு, மூன்று என்று இது மூன்று கட்டங்களாகப் பிரிக்கப்பட்டு, முதல் கட்டத்தினுடைய land acquisition *பணிகள் முழுமையாகத் தற்போது முடிந்துவிட்டன. இந்த ஆண்டே சாலை அமைப்பதற்காக 250 கோடி ரூபாய் திட்ட மதிப்பீடு தயார் செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறது. அது முடிந்தவுடனேயே ஒப்பந்தம் கோரப்பட்டு முதல் கட்டமாக அது முடிந்தாலே, நீங்கள் சொல்கிற கேரளாவிலிருந்து வருகிற சாலை, அதனை இணைக்கிற சாலையாக அமைந்துவிடும். ஆகையால் அந்தப் பணியை முதலாவதாக எடுத்துக்கொள்வோம். இரண்டாவது கட்டத்தில் 70 சதவிகிதம் நில எடுப்புப் பணி முடிந்திருக்கிறது,* Land acquisition *நடந்திருக்கிறது. அதனைச் சற்று வேகப்படுத்தி, அதனையும் அடுத்தகட்டமாக எடுத்துக்கொள்வோம். மூன்றாவது கட்டம் என்பது 50 சதவிகித நில*

எடுப்புப் பணி நடைபெற்றிருக்கிறது. அதனையும் விரைவுபடுத்தி, எவ்வளவு விரைவாக நில எடுப்பினை நாம் செய்ய முடியுமோ, அதனைச் செய்து முழுமையாகப் போடலாம். பொதுவாக இந்தச் சாலைகளை மிகவும் தாமதமாக அமைப்பதற்குக் காரணம் land acquisition பிரச்சினைதான். அதனால்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் சொன்னவுடனேயே இந்த ஆண்டு எங்களுக்குத் தனியாக Special DRO என்கிற அடிப்படையில் 5 Special DRO-க்களை கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பணிகளை மேற்கொள்வதற்கென Revenue Inspector, Tahsildar, RDO என்ற அடிப்படையில் கூடுதலாக 185 அதிகாரிகளையும் கொடுத்திருக்கிறார்கள். எனவே, இந்த ஒருவார காலத்தில் அந்தப் பணிகளைப் பிரித்துக் கொடுத்து எங்கெல்லாம் காலதாமதம் இருக்கிறதோ, அந்தப் பகுதிகளில் நில எடுப்பிற்கு அவர்களைப் பயன்படுத்தி விரைவிலேயே சாலை அமைக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் முனைவர் த. இனிகோ இருதயராஜ் அவர்கள்.

முனைவர் த. இனிகோ இருதயராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான சிந்தாமணி அண்ணா சாலையிலிருந்து தெரசம்மாள் தோப்பு. குடமுருட்டி செல்கின்ற பழைய கரூர் சாலை ஆக்கிரமிப்பாளர்களால் ஆக்கிரமிக்கப்பட்டிருக்கிறது. அங்கே கால்வாய் செல்கின்ற அளவிலே ஒரு சிறிய பாலம் இருக்கின்றது. அதில் bike மற்றும் சிறிய car மட்டுமே செல்லக்கூடிய ஒரு சூழ்நிலையிருக்கிறது. அதனை அகலப்படுத்தித் தர வேண்டும் என்று பல தடவை கோரிக்கை வைத்துள்ளேன். மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கருணை கூர்ந்து ஆக்கிரமிப்பாளர்களை அகற்றி, போக்குவரத்து சிக்கலை நிவர்த்தி செய்து தருவார்களா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர் குறிப்பிடுகின்ற சாலை என்பது முழுக்க முழுக்க

2022 ஏப்ரல் 25]

மாநகராட்சிப் பகுதியிலே வருகிற சாலைதான். இந்தச் சாலையை நானும் அறிந்தவன்தான். எனவே, அவர் கோரிக்கை வைத்ததாகச் சொன்னார்கள்; இன்னும் அது என்னுடைய கவனத்திற்கு வரவில்லை. அவர் சொன்ன அந்த இடங்களையெல்லாம் குறிப்பு எடுத்துக்கொண்டு, என்னிடத்தில் ஒரு மனுவினை கொடுப்பாரேயானால், சம்பந்தப்பட்ட அதிகாரிகளை அழைத்துப் பேசி, அதற்கு எந்தளவுக்கு முன்னுரிமை அளிக்க முடியுமோ அந்தளவுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அருள் அவர்கள்.

திரு. இரா. அருள்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். சேலம்-பெங்களூரு main road-ஐ பொறுத்தவரையில், பொதுமக்கள் அதிகளவில் வந்து செல்கிற நெருக்கடியான சாலை. அங்கிருந்து சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை மற்றும் விடுமுறை நாட்களில் அதிகமான மக்கள் கூட்டம் ஏற்காடு மலைப் பகுதிக்கு வருகிறார்கள். அதற்காக பெங்களூரு main road, மாமாங்கத்திற்குப் பக்கத்தில் வெள்ளக்கால்பட்டி, செட்டிசாவடி, கொண்டமநாயக்கன்பட்டி வழியாக ஏற்காடு அடிவாரத்திற்குச் சாலை இருக்கிறது. ஏற்கெனவே இருக்கின்ற சாலையை, இருவழிச் சாலையாக மாற்றினால், எதிர்காலத்தில் நாம் சேலத்தைச் சுற்றி Ring Road அமைப்பதற்கும் அது ஏதுவாக இருக்கும். அதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்து கொடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அவர்கள், பெங்களூரு சாலைக்கும் ஏற்காடு சாலைக்கும் ஒரு இணைப்புச் சாலை அமைக்க வேண்டும் என்ற ஒரு நல்ல கருத்தைத்தான் சொல்லியிருக்கிறார். ஏனென்று சொன்னால், ஏற்காடு என்பது ஒரு சுற்றுலாத் தலம். ஆகவே, அதனை இணைப்பது என்பது தவறான ஒன்றல்ல; கட்டாயம் செய்ய வேண்டியதுதான். ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைக் குறிப்பெடுத்துக்

கொண்டுதான், அது ODR சாலையா, MDR சாலையா அல்லது SH சாலையா என்பதையெல்லாம் அலசிப் பார்த்து, அது எந்த வகையில் இருந்தாலும் சரி, இந்த மூன்று வகையிலே இருக்குமானால், அதற்கு உடனடியாக முன்னுரிமை அளித்து, அதனை விரிவாக்கம் செய்கிற பணியில் துறை ஈடுபடும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், பேரவைத் துணைத் தலைவர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள்.*

மாண்புமிகு திரு. கு. பிச்சாண்டி (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரயில்வேயில் ஒரே நாளில் underground-ல் culvert-களையெல்லாம் போட்டுத் தரக்கூடிய pre-casting முறையில் பணிகளைச் செய்கிறார்கள். அதேபோன்று pre-casting முறையிலே பல்வேறு சாலைகளில் இருக்கிற culvert-களையெல்லாம் வேகமாகச் செய்தால், எந்தவித accident-ம் இல்லாமல் நடைபெறக்கூடிய சூழ்நிலைகள் ஏற்படும். அதேபோல், வட இந்தியாவில் Prayagraj என்ற ஊரில், மிக நவீன இயந்திரங்களெல்லாம் தற்போது அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆகவே, சாலை அமைப்பதில் காலதாமதம் ஏற்படாமல் இருப்பதற்கு அப்படிப்பட்ட நவீன இயந்திரங்களைக் கொண்ட contractor-களை நியமித்து நம்முடைய தமிழகத்திலேயும் அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 10—15

மேலும், என்னுடைய கீழ்பெண்ணாத்தூர் தொகுதியில், வேட்டவலம் bypass அமைக்கப்படுகின்ற சாலை தேசிய நெடுஞ்சாலையாக இருக்கின்ற காரணத்தால், நில எடுப்புப் பணிகளை விரைவாக முடித்து, உடனடியாக அந்த bypass சாலையை அரசு அமைத்துத் தருவதற்கு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எ.வ. வேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்

2022 ஏப்ரல் 25]

அவர்கள் precast system என்கிற முறையை அரசு கொண்டுவர முடியுமா; அத்திட்டத்தில் விரைந்து செயல்படலாமே என்ற ஒரு கருத்தை அரசுக்குச் சொல்லியிருக்கிறார்கள். ஏற்கெனவே, சென்னையில் வெள்ளம் வந்தபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு நாள் அழைத்துப் பேசினார். Precast system ஏற்கெனவே சென்னையில், மாநில நெடுஞ்சாலையில் புகுத்தப்பட்டுள்ளது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், தற்போது இருக்கின்ற Police Commissioner Office, வேப்பேரி, தினத்தந்தி அலுவலகம் உள்ள இடத்தில் பரீட்சார்த்தமாக 3 பாலங்களை இந்த precast system மூலம் அரசு அமைத்திருக்கிறது. Regular culvert-க்கும் precast-க்கும் என்ன வித்தியாசம் என்றால், precast system-ல் திட்ட மதிப்பீடு கூடுதலாகிவிடுகிறது. எங்கு அவசரத் தேவை உள்ளதோ அவ்விடத்தில் precast system-ஐ பயன்படுத்தலாமேயொழிய, சாதாரணமாக அங்கிருக்கிற culvert-களை அமைப்பதற்கு காலமும் நேரமும் இருக்கிறது; மழை இல்லாத காலங்களில் மாற்றுப் பாதை அமைத்து பணிகளை மேற்கொள்வதுதான் சிறந்த முறையாகும். இன்றைக்கு தமிழக அரசிடம் இருக்கின்ற நிதிச் சுமையைக் கணக்கில் எடுத்துக்கொண்டுதான், அனைத்து இடங்களிலும் precast system-ல் செயல்படுத்த முடியுமா என்பதை முடிவு செய்ய முடியும். எனவே, அவசரத் தேவைக்குத்தான் தற்போது அரசுத் துறை மூலமாக precast system-த்தைப் பயன்படுத்தி பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அடுத்ததாக வேட்டவலம் பகுதி bypass சாலையைக் குறித்துக் கேட்டார்கள். அது ஏற்கெனவே தேசிய நெடுஞ்சாலைக்குட்பட்ட சாலையாகும். இருந்தாலும், நானும் அந்த மாவட்டத்தைச் சேர்ந்தவன் என்கின்ற காரணத்தினாலும், வேட்டவலம் பேரூராட்சி என்பது ஒரு முக்கிய பேரூராட்சி என்பதாலும், அப்பகுதிக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டு, அதற்கான திட்ட மதிப்பீடுகளை தயாரித்துக் கொண்டிருக்கிறோம். ஒரு பகுதியில் நில எடுப்பிற்கு வேண்டிய நிதியை ஒதுக்குவதற்கு அரசின் சார்பாக முன்மொழிவுகள் அனுப்பப்பட்டிருக்கின்றன. ஒன்றிய அரசிடமிருந்து அதற்கான நிதி கிடைத்தவுடனேயே, நில எடுப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, அந்தச் சாலையை இந்த ஆண்டே அமைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 165, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. சுந்தரராஜன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.